2023 மார்ச் 31]

85—

கால்நடை மருத்துவமனை

***10139—திரு. ஆ. கோவிந்தசாமி:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *தருமபுரி ஒன்றியம், உங்கராளஅள்ளி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *தருமபுரி ஒன்றியம், உங்கராளஅள்ளி ஊராட்சியில் புதிதாக கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள்.*

திரு. ஆ. கோவிந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இயக்கத்தின் மூன்றாவது தலைமுறை, எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.* (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய தொகுதிக்குட்பட்ட உங்கராளஅள்ளி, முக்கல்நாய்க்கன்பட்டி, அ.கொல்லஅள்ளி ஆகிய பகுதிகளில், பசுக்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 1,779–ம், எருமை மாடுகளின் எண்ணிக்கை 1,617–ம், செம்மறி ஆடுகளின் எண்ணிக்கை 629–ம், வெள்ளாடுகளின் எண்ணிக்கை 4,578–ம், கோழிகளின் எண்ணிக்கை ஏறக்குறைய 20 ஆயிரமாக

இருக்கின்றன. ஏற்கெனவே, நான் மானியக் கோரிக்கையில் பேசுகின்றபோது, கால்நடை மருத்துவமனை அல்லது கால்நடைக் கிளை நிலையமாவது தொடங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கோரிக்கை வைத்தேன். கால்நடை மருத்துவமனை தொடங்க வாய்ப்பில்லை என்று சொன்னால்கூட, உங்கராளஅள்ளி ஊராட்சி, மேல்கன்னியான்கொட்டாய் பகுதியிலிருந்து இலக்கியம்பட்டியில் இருக்கின்ற தலைமை மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், 12 கிலோ மீட்டர் தூரமும், நூலஅள்ளிக்கு செல்ல வேண்டுமென்று சொன்னால், 9 கிலோ மீட்டர் தூரமும், செட்டிக்கரைக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், 13 கிலோ மீட்டர் தூரமும் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, இல்லையென்ற பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லாமல், அங்கு கால்நடைக் கிளை நிலையமாவது தொடங்க ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நடைமுறையிலுள்ள அரசு வரைமுறைகளின்படி, நேரடியாகக் கால்நடை மருத்துவமனை அமைக்க இயலாது. முதலில், கால்நடைக் கிளை நிலையம் துவக்கப்பட்டு, அது அரசினுடைய வரைமுறைக்குட்பட்டு இருக்குமாயின், அந்தக் கால்நடைக் கிளை நிலையம் கால்நடை மருத்துவமனையாகவும், கால்நடை மருந்தகம் அரசு வரைமுறைகளின்படி இருக்குமாயின், அந்த மருந்தகம் கால்நடை மருத்துவமனையாகவும் தரமுயர்த்தப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நேரடியாகக் கால்நடை மருத்துவமனை வேண்டுமென்று கோரியுள்ளார். எனவே, பாப்பிரெட்டிப்பட்டி தொகுதி, தருமபுரி ஒன்றியம், உங்கராளஅள்ளி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், அங்குள்ள கால்நடை அலகுகளைக் கணக்கெடுத்து, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள்.

2023 மார்ச் 31]

திரு. ஆ. கோவிந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் இங்கே பேசியபோது, அதென்ன 3 ஆயிரம் மாடு, 30 ஆயிரம் லிட்டர் பால் என்று தாங்களே விளையாட்டாகச் சொன்னீர்கள். எனது தொகுதியில் உள்ள வடகரை பகுதியில் பால் அதிகமாக உற்பத்தியாகிறது; கால்நடை அலகுகளும் அங்கு அதிகமாக இருக்கின்றன.*

*சோளக்கொட்டாய் பகுதியில், இந்த அரசு இதைச் சற்று கவனிக்க வேண்டும். கடந்த ஒரு மாதத்திற்கு முன்பாக சோளக்கொட்டாய் பகுதியில் இருப்பவர்கள் மூக்கனூர் பகுதிக்குச் சென்றுதான் கால்நடைக்கு மருத்துவம் பார்த்தார்கள். எங்கள் மாவட்டத்தில் ஏற்கெனவே ஒரு பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. கடந்த ஒரு மாதத்திற்கு முன்பாக **மாண்புமிகு மாவட்ட* incharge *அமைச்சர் அவர்களுக்குக்கூட தெரியுமென்று நான் நினைக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அதெல்லாம் தேவையில்லை. (குறுக்கீடு)*

திரு. ஆ. கோவிந்தசாமி: *இல்லை. அந்த விஷயத்தை சொல்லிவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், ** குறித்து சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். (குறுக்கீடு) நீங்கள் விஷயத்திற்கு வாருங்கள். அதில் பிரச்சினை இல்லை.*

திரு. ஆ. கோவிந்தசாமி: *அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுங்கள். நான் சொல்வதை நீங்கள் கருத்தில்கொள்ள வேண்டும். அந்த இடத்திற்குச் சென்றதால், ***

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அது வேண்டாம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கால்நடை அல்லாத ** குறித்து சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன்.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

திரு. ஆ. கோவிந்தசாமி: *சோளக்கொட்டாய் பகுதியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க வேண்டும். சில எம்.எல்.ஏ.–க்கள் இங்கு புதிதாக வந்திருக்கிறோம். கால்நடை மருத்துவமனை வேண்டுமென்று கேட்கிறார்கள்; நாங்களும் எழுதிவிடுகிறோம். கால்நடைக் கிளை நிலையம் என்று எழுதுவதற்கு பதிலாக கால்நடை மருத்துவமனை என்று குறிப்பிட்டு விடுகிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மட்டுமே* point *ஆக வைத்துக்கொண்டு, கால்நடை மருத்துவமனை அமைக்க இயலாது என்று பதில் சொல்லிவிடுகிறார்கள். ஆகவே, கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தர வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எப்படி பதில் சொல்ல வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். (குறுக்கீடு) கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தரப்படுமா என்று நீங்கள் கேட்கிறீர்கள்.*

திரு. ஆ. கோவிந்தசாமி: *ஆமாம். கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தர இந்த அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற கணக்கின்படி, கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைமைக்கேற்ப தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு.* JMH. *அசன் மௌலானா, மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*